முதன்மை அமர்வு நீதிமன்றம், சிவகங்கை

முன்னிலை: **திருமதி.K.அறிவொளி**, M.A.,M.L.,

முதன்மை அமர்வு நீதிபதி, சிவகங்கை.

2026-ம் வருடம் மார்ச் மாதம் 23-ம் நாள் திங்கட் கிழமை

**சிறப்பு அமர்வு வழக்கு எண்:95/2024**

(CNR No.TNSV01004535/2024)

*****

(மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், சிங்கம்புணரி முதல் நிலை பதிவேட்டு வழக்கு எண்.21/2022, புழுதிபட்டி காவல் நிலைய குற்ற எண்.95/2021)

தமிழ்நாடு அரசுக்காக காவல் ஆய்வாளர்,
புழுதிபட்டி காவல் நிலைய
குற்ற எண்.95/2021 . . . குற்ற முறையிடுபவர்

/எதிரிடை/

இராமசாமி,
த/பெ.சின்னையா,
இரணிப்பட்டி,
சிங்கம்புணரி தாலுகா,
சிவகங்கை மாவட்டம். . . . எதிரி

| | | |
|---|---|---|
| குற்றம் முறையிடுபவர் | : | தமிழ்நாடு அரசுக்காக காவல் ஆய்வாளர்,<br>புழுதிபட்டி காவல் நிலைய<br>குற்ற எண்.95/2021 |
| குற்றம் சாட்டப்பட்டவர் | : | இராமசாமி,<br>த/பெ.சின்னையா,<br>இரணிப்பட்டி,<br>சிங்கம்புணரி தாலுகா,<br>சிவகங்கை மாவட்டம். |
| குற்றம் முறையிடப்பட்டது | : | எதிரி மீது இதச பிரிவு *379* உ/இ பிரிவு 21(4) of Mines and Minerals (Development and Regulation) Act, 1957-ன் கீழ். |
| எதிரி மீது வனையப்பட்ட குற்றச்சாட்டு | : | எதிரி மீது பிரிவு 21(4) of Mines and Minerals (Development and Regulation) Act, 1957 உ/இ இதச பிரிவு *379*-ன் கீழ் குற்றச்சாட்டு |

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.03.23 18:19:14 +0530

வனையப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| எதிரியின் வாதுரை | : | குற்றவாளி இல்லை. |
| தீர்மானம் | : | ***முடிவில்,*** எதிரி பிரிவு 21(4) of Mines and Minerals (Development and Regulation) Act, 1957 உ/இ இதச பிரிவு *379*-ன் கீழ் குற்றவாளி இல்லை என தீர்மானித்து கு.வி.மு.ச. பிரிவு 235(1)-ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. |

இவ்வழக்கு கற்றறிந்த மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், சிங்கம்புணரி முன்னிலையில் முதல் நிலை பதிவேட்டு வழக்கு எண்.21/2022 என்று கோப்பில் எடுக்கப்பட்டு கு.வி.மு.ச 209 பிரிவின் கீழ் மேல் விசாரணைக்கு அனுப்பப்பட்டு இந்நீதிமன்றத்தில் 17.03.2026-ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டும், அரசு தரப்பில் அரசு குற்றத்துறை வழக்கறிஞர் திரு.*A*.அழகர்சாமி அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.*S*.கார்த்திகேயன் அவர்கள் முன்னிலையாகியும், இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், முன்னிலைப்படுத்தப்பட்ட ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையிலிருந்தும் இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும் . . .

**<u>தீ ர் ப் பு ரை-</u>**

இவ்வழக்கில், கடந்த 21.12.2021-ம் தேதி அதிகாலை 02.00 மணியளவில் எதிரியும், இவ்வழக்கின் இளஞ்சிறார் குமார் என்பவரும் சேர்ந்து வெள்ளக்குட்டி என்பவருக்குச் சொந்தமான பட்டா எண்.201B-ல், புல எண்.271/B என்ற தரிசு நிலத்தில் TN 10 R 6331 என்ற JCB வாகனத்தின் உதவியுடன் TN 45 AW 9103 என்ற பதிவெண் கொண்ட டிராக்டர் மற்றும் TN 45 AW 9102 என்ற பதிவெண் கொண்ட டிரெய்லரில் சுமார் 1 யூனிட் அளவுள்ள கிராவல் மண்ணை

எவ்வித அரசு அனுமதியும், உரிமமும் இல்லாமல் சட்ட விரோதமாக சுயலாபம் கருதி அரசுக்கு இழப்பு ஏற்படுத்த வேண்டுமென்ற கெட்ட எண்ணத்தில் திருடியுள்ளீர்கள் என்றும், எனவே எதிரி பிரிவு 21(4) Mines and Minerals (D&R) Act, 1957 r/w 379 IPC-ன் கீழ் தண்டிக்கத்தக்கவர் என்று புழுதிபட்டி காவல்நிலைய காவல் ஆய்வாளர் குற்ற அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2) எதிரி கற்றறிந்த மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், சிங்கம்புணரி அவர்கள் முன்பாக முன்னிலையான போது, எதிரிக்கு வழக்கு ஆவணங்களின் நகல்கள் கு.வி.மு.ச. பிரிவு 207-ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டும், எதிரி மீதான குற்றம் சிவகங்கை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தால் மட்டுமே விசாரிக்கப்படத்தக்கது என்பதால் கு.வி.மு.ச. பிரிவு 209-ன் கீழ் வழக்குக் கோப்பு இந்நீதிமன்றத்தில் விசாரணைக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

3) எதிரி இந்நீதிமன்றத்தில் முன்னிலையானபோது அவர் மீது சுமத்தப்பட்ட பிரிவு 21(4) Mines and Minerals (D&R) Act, 1957 r/w 379 IPC-ன் கீழ் குற்றம் புரிந்திருக்கக்கூடும் என்று அனுமானிக்கத்தக்கக் காரணம் இருக்கின்றது என்று முடிவு செய்து, கடந்த 17.02.2025 அன்று எதிரி மீது பிரிவு 21(4) Mines and Minerals (D&R) Act, 1957 r/w 379 IPC-ன் கீழான குற்றத்தைப் பற்றி எழுத்து மூலமான குற்றச்சாட்டு வனைந்து கு.வி.மு.ச.பிரிவு 228(1) (ஆ)-ன் கீழ் எதிரிகளிடம் குற்றச்சாட்டை தமிழில் படித்துக்காட்டி விளக்கிக் கூறியபோது எதிரி பிரிவு 21(4) Mines and Minerals (D&R) Act, 1957 r/w 379 IPC-ன் கீழான குற்றத்தை மறுத்துரைத்து, தான் குற்றவாளி இல்லை என்று கூறி விசாரணை கோரினார். எனவே, இந்நீதிமன்றத்தால் கு.வி.மு.ச. பிரிவு 231-ன் கீழ் அரசுத் தரப்பு சாட்சியங்களை விசாரணை செய்ய உத்தரவிடப்பட்டது.

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.03.23 18:19:50 +0530

**4)** அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.5 வலையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அவர்கள் மூலமாக அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.18 வரையிலான சான்றாவணங்களும் அ.சா.பொ.1 குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**5) அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சியங்களின் சுருக்கம் பின்வருமாறு:-**

*i)* அ.சா.1 லாவண்யா தனது சாட்சியத்தில், கடந்த 2021-ஆம் ஆண்டு சிவகங்கை மாவட்டம் சிங்கம்புணரி வட்டம் புழுதிபட்டி காவல் எல்லைக்குட்பட்ட வலசைப்ட்டி கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணியிலிருந்த போது 21.12.2021-ம் தேதி காலை 5.00 மணியளவில் தானும், கிராம உதவியாளர் செல்வம் என்பவரும் அலுவலகத்தில் பணியில் இருந்த போது தங்களுக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் வலசைப்பட்டி குரூப் அம்மாப்பட்டி கிராம புல எண்.271/73-ல் அரசுக்குச் சொந்தமான இடத்தில் இரணிப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த சின்னையா மகன் இராமசாமி என்பவரும் அவருடன் அவரின் மகன் குமார் என்பவரும் TN 10 R 6331 என்ற *JCB*-யில் TN 45 AW 9103 என்ற பதிவெண் கொண்ட டிராக்டர் மற்றும் TN 45 AW 9102 என்ற பதிவெண் கொண்ட டிரெய்லர் மூலம் கிராவல் மண்ணை திருட்டுத் தனமாக அள்ளிக் கொண்டிருந்த போது வண்டி ஓடிக் கொண்டிருந்த நிலையில் டிராக்டர் கவிழ்ந்து டிராக்டரை ஓட்டி வந்த உரத்துப்பட்டியைச் சேர்ந்த ராமகிருஷ்ணன் மகன் தமிழரசன் என்பவர் வண்டிக்கு அடியில் சிக்கி இறந்து விட்டதாக தகவல் தெரிந்து மேற்குறிப்பிட்ட சம்பவம் குறித்து புழுதிப்பட்டி காவல்நிலையம் சென்று எழுத்து மூலமான புகார் கொடுத்ததாகவும், மேற்படி புகார் அ.சா.ஆ.1 என்றும் சாட்சியமளித்துள்ளார்.

*ii)* அ.சா.5 கலாராணி தனது சாட்சியத்தில், கடந்த 21.12.2021-ல் சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் வட்டம் உலகம்பட்டி காவல் நிலையத்தில் காவல்

ஆய்வாளராக பணியில் இருந்த போது தனது கட்டுப்பாட்டில் வரும் புழுதிப்பட்டி காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியில் இருந்த நாசர் என்பவர் நிலைய குற்ற எண்.95/2021-ல் இதச பிரிவு 379 மற்றும் 21(4) MMDR Act மற்றும் 304(*A*) இதச படி பதிவு செய்து வைத்திருந்த முதல் தகவல் அறிக்கையை உரிய நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்து அதன் நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளின் பார்வைக்கு வைத்து வழக்கு கோப்பை மேல்விசாரணைக்காக தன் வசம் ஒப்படைத்தார் என்றும், சார்பு ஆய்வாளர் நாசர் என்பவர் தயாரித்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 என்றும், இவ்வழக்கில் அன்றைய தினமே பகல் 10.30 மணியளவில் வழக்கு கோப்பை விசாரணைக்கு எடுத்துக் கொண்டு சம்பவ இடம் சென்று சாட்சிகள் வீரமலை, மச்சக்காளை ஆகியோர்களை சாட்சிகளாக வைத்து பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்ததாகவும், மேற்படி பார்வை மகஜர் அ.சா.ஆ.5 என்றும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.6 என்றும், இவ்வழக்கில் வண்டியை கவனக் குறைவாக ஓட்டி வந்த இறந்து போன தமிழரசனின் உடல் பரிசோதனையை மேற்கொள்ள வேண்டுகோள் கடிதம் கொடுத்ததாகவும், அதன் அடிப்படையில் பிரேத பரிசோதனைக்கு முன் சாட்சிகள் முன்னிலையில் பிரேத விசாரணை அறிக்கை தயாரித்ததாகவும், மேற்படி பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.7 என்றும், எதிரி இராமசாமி என்பவரை வலசை பேருந்து நிறுத்தத்தில் வைத்து கைது செய்து சாட்சிகள் பழனிசாமி மற்றும் குமரேசன் ஆகியோர் முன்னிலையில் எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெற்றதாகவும், மேற்படி ஒப்புதல் வாக்குமூலம் அ.சா.ஆ.8 என்றும், மேலும் இவ்வழக்கில் TN 10 R 6331 என்ற *JCB*-யில் TN 45 AW 9103 என்ற பதிவெண் கொண்ட டிராக்டர் மற்றும் TN 45 AW 9102 என்ற பதிவெண் கொண்ட டிரெய்லர் ஆகியவைகளை

கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றியதாகவும், மேற்படி கைப்பற்றுதல் மகஜர்கள் முறையே அ.சா.ஆ.9 மற்றும் அ.சா.ஆ.10 என்றும், மேற்படி TN 10 R 6331 என்ற JCB-யில் TN 45 AW 9103 என்ற பதிவெண் கொண்ட டிராக்டர் மற்றும் TN 45 AW 9102 என்ற பதிவெண் கொண்ட டிரெய்லர் வாகனங்கள் முறையே சா.பொ.1 வரிசை என்றும், டிராக்டரை ஓட்டி வந்து காயம்பட்ட தமிழரசன் என்பவருக்கு அரசு பாப்பாயி மருத்துவமனையில் முதலில் வழங்கப்பட்ட காயச்சான்று அ.சா.ஆ.11 என்றும், மேற்குறிப்பிட்ட நபர் இறந்ததை உறுதி செய்த பின் பொன்னமராவதி மருத்துவமணையில் வழங்கப்பட்ட பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.12 என்றும், 03.02.2022ம் தேதி தடய அறிவியல் கூடத்திலிருந்து பெறப்பட்ட விஸ்ரா அறிக்கை அ.சா.ஆ.13 என்றும், கடந்த 31.05.2022-ல் இறந்து போன நபர் வழக்கின் குற்றவாளி பட்டியலில் இருந்து எதிரி நீக்கப்பட்டு அதற்கு தான் தயாரித்த நீக்கல் அறிக்கை அ.சா.ஆ.14 என்றும், கடந்த 31.05.2022-ல் இவ்வழக்கில் குற்ற பிரிவு இதச பிரிவு 379 மற்றும் 21(4) MMDR Act மற்றும் 304(*A*) இதச பிரிவுகளிலிருந்து 304(*A*) இதச பிரிவை மட்டும் நீக்கம் செய்து தான் தயாரித்த சட்ட பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.15 என்றும், இவ்வழக்கில் கைப்பற்றிய சொத்துகளான TN 10 R 6331 என்ற JCB-யில் TN 45 AW 9103 என்ற பதிவெண் கொண்ட டிராக்டர் மற்றும் TN 45 AW 9102 என்ற பதிவெண் கொண்ட டிரெய்லர் ஆகிய வாகனங்களை உரிய நீதிமன்றத்திற்கு படிவம் 91 மூலம் அனுப்பி வைத்ததாகவும், மேற்படி படிவம்-91 முறையே அ.சா.ஆ.16 மற்றும் அ.சா.ஆ.17 என்றும், இவ்வழக்கில் சாட்சிகளான லாவண்யா, செல்வம், பாலகிருஷ்ணன், மணிமுத்து, ராமகிருஷ்ணன், பூங்கோதை, பழனிச்சாமி, குமரேசன், வீரமலை, மச்சக்காளை, மாணிக்கம், மருத்துவர் பிரியதர்ஷினி, காவலர் தமிழரசன், சார்பு

ஆய்வாளர் நாசர் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்த நிலையில் உரிய சான்றிதழ்கள் பெற்று கடந்த 31.05.2022-ல் இதச பிரிவு 379 மற்றும் 21(4) MMDR Act-ன் படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாகவும், மேலும் குவிமுச பிரிவு 200 படியான தனி நபர் புகாரை கடந்த 06.04.2022-ல் தாக்கல் செய்ததாகவும், மேற்படி குவிமுச பிரிவு 200 படியான தனி நபர் புகார் அ.சா.ஆ.18 என்றும் சாட்சியமளித்துள்ளார். இத்துடன் அரசுத் தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள் முடிக்கப்பட்டது.

**6)** அரசுத் தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களில் இருந்து எதிரிக்குப் பாதகமாக இருக்கக்கூடிய பகுதிகள் பற்றி எதிரியிடம் கு.வி.மு.ச. பிரிவு 313 (1) (ஆ)-ன் கீழ் தமிழில் விளக்கிக் கூறி வினவிய போது, எதிரி அரசுத் தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களில் தனக்குப் பாதகமாக தோன்றக் கூடிய பகுதிகளைப் பொய் என மறுத்துள்ளார். மேலும், தனது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்று கூறப்பட்டதை தொடர்ந்து, எதிரி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

**7)** தற்போது இந்நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை என்னவென்றால் எதிரிக்கு எதிரான 21(4) of Mines and Minerals (Development and Regulation) Act, 1957 உ/இ இதச பிரிவு *379*-ன் கீழான குற்றச்சாட்டு அரசுத்தரப்பால் தகுநிலை ஐயப்பாட்டிற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதேயாகும்.

**பிரச்சனைக்குரிய தீர்வு:-**

**8)** இவ்வழக்கில், கடந்த 21.12.2021-ம் தேதி அதிகாலை 02.00 மணியளவில் எதிரியும், இவ்வழக்கின் இளஞ்சிறார் குமார் என்பவரும் சேர்ந்து

வெள்ளக்குட்டி என்பவருக்குச் சொந்தமான பட்டா எண்.201B-ல், புல எண்.271/B என்ற தரிசு நிலத்தில் TN 10 R 6331 என்ற JCB வாகனத்தின் உதவியுடன் TN 45 AW 9103 என்ற பதிவெண் கொண்ட டிராக்டர் மற்றும் TN 45 AW 9102 என்ற பதிவெண் கொண்ட டிரெய்லரில் சுமார் 1 யூனிட் அளவுள்ள கிராவல் மண்ணை எவ்வித அரசு அனுமதியும், உரிமமும் இல்லாமல் சட்ட விரோதமாக சுயலாபம் கருதி அரசுக்கு இழப்பு ஏற்படுத்த வேண்டுமென்ற கெட்ட எண்ணத்தில் திருடியுள்ளார் என்பதாக எதிரி மீது *21*(4) of Mines and Minerals (Development and Regulation) Act, 1957 உ/இ இதச பிரிவு *379*-ன் கீழ் குற்றச்சாட்டு வனையப்பட்டுள்ளது.

**9)** எதிரி மீது வனையப்பட்டுள்ள குற்றச்சாட்டை நிரூபணம் செய்யும் வகையில் அரசுத் தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.5 வலையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.18 மற்றும் அ.சா.பொ.1 குறியீடு செய்யப்பட்டுள்ளன. இவ்வழக்கில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகளில் அ.சா.1 லாவண்யா, கிராம நிர்வாக அலுவலர் சம்பவம் பற்றி கேள்விபட்டு சம்பவ இடம் சென்று புகார் கொடுத்தது பற்றி கூறும் சாட்சி, அ.சா.2 பாலகிருஷ்ணன் சம்பவம் பற்றி கேள்விபட்டு சாட்சிகள்-4, 5-க்கு தகவல் சொன்னது பற்றி கூறும் சாட்சி, அ.சா.3 பழனிச்சாமி ஒப்புதல் வாக்குமூல சாட்சி, அ.சா.4 வீரமலை பார்வை மகஜர் சாட்சி, அ.சா.5 கலாராணி, காவல் ஆய்வாளர், சாட்சி 12-விடம் இருந்து வழக்கு கோப்பை பெற்று மாதிரி வரைபடம், பார்வை மகஜர் தயார் செய்தது, சாட்சிகளிடம் 161(3) வாக்குமூலம் பதிவு, எதிரியின் கைது, எதிரி மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்தது பற்றி கூறும் சாட்சி ஆவார்.

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.03.23 18:20:36 +0530

23.03.2026
முதன்மை அமர்வு நீதிபதி, சிவகங்கை.

10) அரசுத் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் அவர்கள் இவ்வழக்கில் எதிரி மீதான குற்றச்சாட்டை நிரூபணம் செய்யும் வகையில் அ.சா.1 முதல் அ.சா.5 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.18 வரையிலான சான்றாவணங்களும், அ.சா.பொ.1 குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், இவ்வழக்கில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகள் அனைவரும் கடந்த 21.12.2021-ம் தேதி அதிகாலை 02.00 மணியளவில் எதிரியும், இவ்வழக்கின் இளஞ்சிறார் குமார் என்பவரும் சேர்ந்து வெள்ளக்குட்டி என்பவருக்குச் சொந்தமான பட்டா எண்.201B-ல், புல எண்.271/B என்ற தரிசு நிலத்தில் TN 10 R 6331 என்ற JCB வாகனத்தின் உதவியுடன் TN 45 AW 9103 என்ற பதிவெண் கொண்ட டிராக்டர் மற்றும் TN 45 AW 9102 என்ற பதிவெண் கொண்ட டிரெய்லரில் சுமார் 1 யூனிட் அளவுள்ள கிராவல் மண்ணை எவ்வித அரசு அனுமதியும், உரிமமும் இல்லாமல் சட்ட விரோதமாக சுயலாபம் கருதி அரசுக்கு இழப்பு ஏற்படுத்த வேண்டுமென்ற கெட்ட எண்ணத்தில் திருடியுள்ளார் என்பது நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே எதிரிக்கு தக்க தண்டனை வழங்க வேண்டுமென்று வாதிட்டார்.

11) எதிரி தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் அவர்கள் இவ்வழக்கில் சம்பவத்தை நேரில் கண்ணுற்ற சாட்சிகள் யாரும் இல்லை என்றும், புகார் காலதாமதமாக கொடுக்கப்பட்டுள்ளது என்றும், சம்பவ இடத்தின் சொந்தக்காரரான அழகர் என்பவரை சாட்சியாக விசாரிக்கவில்லை என்றும், தனிநபர் யாரும் புகார் கொடுக்கவில்லை என்றும், எந்த இடத்தில், எந்த சர்வே எண்ணில் கிராவல் மண் அள்ளப்பட்டது என்ற விவரம் புகாரிலோ, விசாரணையிலோ சொல்லப்படவில்லை என்றும், கனிமவளத் துறை அதிகாரிகள்

யாரும் சாட்சியாக விசாரிக்கப்படவில்லை என்றும், எதிரி TN 10 R 6331 என்ற JCB வாகனத்தின் உதவியுடன் TN 45 AW 9103 என்ற பதிவெண் கொண்ட டிராக்டர் மற்றும் TN 45 AW 9102 என்ற பதிவெண் கொண்ட டிரெய்லரில் அள்ளிக் கொண்டு வந்த கிராவல் மண் யாரிடம் ஒப்படைக்கப்பட்டது என்பதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றும், எதிரிகளுக்கும், இவ்வழக்கு சம்பவத்திற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றும், புள்ளிவிபர கணக்கிற்காக எதிரி மீது இவ்வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், மேலும் அரசு அனுமதியில்லாமல் எதிரி TN 10 R 6331 என்ற JCB வாகனத்தின் உதவியுடன் TN 45 AW 9103 என்ற பதிவெண் கொண்ட டிராக்டர் மற்றும் TN 45 AW 9102 என்ற பதிவெண் கொண்ட டிரெய்லரில் கிராவல் மண்ணை அள்ளிக் கொண்டு வந்தார் என்பது பற்றியும் அரசு தரப்பில் தகுந்த சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் நிரூபணம் செய்யப்படவில்லை என்றும், எனவே எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு அரசு தரப்பில் தகுந்த சாட்சிகளின் சாட்சியங்கள் மூலம் நிரூபணம் செய்யப்படவில்லை என்றும், எனவே இவ்வழக்கில் எழுந்துள்ள சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்கி எதிரியை இவ்வழக்கு குற்றச்சாட்டுகளில் இருந்து விடுதலை செய்ய வேண்டியது அவசியம் என்று வாதிட்டார்.

**12)** இவ்வழக்கில், எதிரி தரப்பில் அ.சா.1-ஐ குறுக்கு விசாரணை செய்யும் போது அவர் தனது குறுக்கு விசாரணையில் சம்பவம் குறித்து போலீசார் தன்னை 21.12.2021-ம் தேதி மதியம் 12.00 மணிக்கு விசாரித்தார் என்றும், அதன் பின்பு தான் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றும், வலசைப்பட்டி குரூப்பில் மொத்தம் 8 கிராமம் உள்ளது என்றும், தனது அலுவலகம் வலசைப்பட்டி கிராமத்தில் உள்ளது என்றும், வலசைப்பட்டி கிராமத்திற்கும், அம்மாப்பட்டி

கிராமத்திற்கும் இடையே சுமார் 1 கி.மீ தூரம் இருக்கும் என்றும், தான் திருச்சியில் வசித்து வருவதாகவும், திருச்சியில் இருக்கும் போது தான் தனக்கு தகவல் கிடைத்து சம்பவ இடம் வந்தேன் என்றும், புல எண்.271/73 என்பது தனியாருக்கு சொந்தமான விவசாய நிலம் என்றும், மேற்படி இடத்திற்கு உரிமையாளர் அழகன் என்றும், மேற்படி சம்பவம் குறித்து அழகன் என்பவரை விசாரிக்கவில்லை என்றும், வருவாய் ஆய்வாளர் புகார் கொடுப்பதற்கு தன்னுடன் வந்தார் என்ற விவரத்தை புகாரிலோ, போலீசார் விசாரணையிலோ சொல்லவில்லை என்றும், சம்பவ இடம் அழகன் என்பவருக்குச் சொந்தமானது என்பதற்கு ஆவணம் எதுவும் காவல்நிலையத்தில் கொடுக்கவில்லை என்றும், முதல் விசாரணையில் சொல்லியுள்ள டிராக்டர் மற்றும் ஜேசிபி வாகனத்தை தான் கைப்பற்றி காவல்நிலையத்தில் ஒப்படைக்கவில்லை என்றும், தான் கொடுத்த புகாரில் கிராவல் மண் அளவு குறித்து குறிப்பிட்டு சொல்லவில்லை என்றும், டிராக்டர், ஜேசிபி வாகனம் மற்றும் கிராவல் மண் குறித்த புகைப்படம் எதுவும் காவல்நிலையத்தில் கொடுக்கவில்லை என்றும், மண் அள்ளியதாக சொல்லப்படும் இடத்தின் விஸ்தீரணம், எந்த பகுதியில் அள்ளப்பட்டது என்ற விவரம் குறித்து காவல்நிலையத்தில் சொல்லவில்லை என்றும், தான் சம்பவ இடத்திற்கு காலை சுமார் 5.00 மணிக்கு தகவல் கிடைத்த உடனேயே வந்து விட்டேன் என்றும், தான் சம்பவ இடத்திற்கு சென்ற போது இறந்த நபரின் உடலை அப்புறப்படுத்திக் கொண்டிருந்தார்கள் என்றும், அப்போதே போலீசார் வந்து விட்டார்கள் என்றும், இறந்த நபர் குறித்து தனியாக யாரேனும் புகார் கொடுத்ததாக தெரிந்து கொண்டேனா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது என்றும் ஒப்புக்கொண்டு சாட்சியமளித்துள்ளார்.

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.03.23 18:21:08 +0530

*23.03.2026*

முதன்மை அமர்வு நீதிபதி, சிவகங்கை.

**13)** அதேபோல் அ.சா.5 தனது குறுக்கு வசாரணையில் சம்பவ இடத்திற்கும், காவல் நிலையத்திற்கும் இடையே 13 கி.மீ என்றும், வழக்கு சம்பவம் 21.12.2021-ம் தேதி அதிகாலை 02.00 மணிக்கு சம்பவம் நடந்ததாகக் கூறி அன்றைய தினம் காலை 10.00 மணிக்கு புகார் கொடுக்கப்பட்டது என்றும், மேற்படி 08.00 மணி நேர காலதாமதம் குறித்து புகாரிலோ விசாரணையிலோ சொல்லவில்லை என்றும், காலை 11.00 மணிக்கு தயாரித்ததாக சொல்லப்பட்ட மாதிரி வரைபடத்தில் டிராக்டர் உள்ளது என்று சொல்லப்பட்டுள்ளது என்றும், ஆனால் அன்று மாலைதான் டிராக்டர் மகஜர் மூலம் கைப்பற்றப்பட்டது என்றும், சம்பவ இடத்திற்கு சொந்தக்காரரான அழகர் என்பவரை சாட்சியாக விசாரிக்கவில்லை என்றும், இவ்வழக்கில் தனிநபர் யாரும் புகார் கொடுக்கவில்லை என்றும், எந்த இடத்தில், எந்த சர்வே எண்ணில் கிராவல் மண் அள்ளப்பட்டது என்ற விவரம் புகாரிலோ, விசாரணையிலோ சொல்லப்படவில்லை என்றும், இவ்வழக்கில் எடுக்கப்பட்டதாக சொல்லப்படும் புகைப்படங்கள் சம்பவ இடத்தில் வைத்து எடுக்கப்படவில்லை என்றும், கனிம வள அதிகாரிகள் யாரையும் சாட்சியாக விசாரிக்கவில்லை என்றும், சம்பவத்தை நேரில் கண்டதாக எந்த சாட்சியம் இல்லை என்றும் ஒப்புக்கொண்டு சாட்சியமளித்துள்ளார்.

**14)** இந்நிலையில் 21.12.2021-ம் தேதி அதிகாலை 02.00 மணியளவில் எதிரியும், இவ்வழக்கின் இளஞ்சிறார் குமார் என்பவரும் சேர்ந்து வெள்ளக்குட்டி என்பவருக்குச் சொந்தமான பட்டா எண்.201B-ல், புல எண்.271/B என்ற தரிசு நிலத்தில் TN 10 R 6331 என்ற JCB வாகனத்தின் உதவியுடன் TN 45 AW 9103 என்ற பதிவெண் கொண்ட டிராக்டர் மற்றும் TN 45 AW 9102 என்ற பதிவெண் கொண்ட டிரெய்லரில் சுமார் 1 யூனிட் அளவுள்ள கிராவல் மண்ணை எவ்வித அரசு

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.03.23 18:21:15 +0530

அனுமதியும், உரிமமும் இல்லாமல் சட்ட விரோதமாக சுயலாபம் கருதி அரசுக்கு இழப்பு ஏற்படுத்த வேண்டுமென்ற கெட்ட எண்ணத்தில் திருடியுள்ளார்கள் என்று சொல்லப்பட்டுள்ளது. அவ்வாறு எதிரி மேற்படி வாகனத்தில் எந்த சர்வே எண்ணில், யாருக்குச் சொந்தமான இடத்தில் இருந்து கிராவல் மண்ணை அள்ளிக் கொண்டு வந்தார்கள் என்பதை புகாரிலோ, விசாரணையிலோ சொல்லப்படவில்லை என்றும், மேற்படி வாகனத்தின் மூலம் அள்ளிவரப்பட்ட கிராவல் மண் யாரிடம் ஒப்படைக்கப்பட்டது என்பதற்கும் அரசு தரப்பில் யாதொரு ஆவணமும் முன்னிடப்படவில்லை.

**15)** இந்நிலையில், இவ்வழக்கில் சொல்லப்பட்டுள்ளதுபோல் எதிரி அரசு அனுமதியில்லாமல் TN 10 R 6331 என்ற JCB வாகனத்தின் உதவியுடன் TN 45 AW 9103 என்ற பதிவெண் கொண்ட டிராக்டர் மற்றும் TN 45 AW 9102 என்ற பதிவெண் கொண்ட டிரெய்லரில் சுமார் 1 யூனிட் அளவுள்ள கிராவல் மண்ணை அள்ளிச் சென்றார் என்பது குறித்து சந்தேகம் எழுகிறது என்று கூறும் எதிரி தரப்பு கூற்று எளிதில் நிராகரிப்பதற்கில்லை. மேலும் தனிப்பட்ட சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை என்பதையும் அறிய முடிகிறது. அதிலும் குறிப்பாக தனிநபர்கள் யாரும் தனிப்பட்ட முறையில் புகார் எதுவும் கொடுக்கவில்லை. மேலும் புலஎண்.271/73 என்பது அழகன் என்பவருக்குச் சொந்தமான நிலம் என்றும், மேற்படி அழகன் என்பவரை சாட்சியாக விசாரிக்கவில்லை என்றும் அ.சா.1 ஒப்புக்கொண்டுள்ளார். இந்நிலையில், இவ்வழக்கிற்கும் எதிரிக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றும், புள்ளி விபர கணக்கிற்காக எதிரி மீது பொய்யாக இவ்வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்று கூறும் எதிரிகள் தரப்பு கூற்று எளிதில் நிராகரிப்பதற்கில்லை.

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.03.23 18:21:23 +0530

*23.03.2026*

முதன்மை அமர்வு நீதிபதி, சிவகங்கை.

16) எனவே, மேலே விவாதிக்கப்பட்டுள்ள காரணங்களின் அடிப்படையில் அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் வாய்மொழி சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை ஒருங்கிணைந்து சீர்தூக்கி பார்க்கும்போது எதிரி மீது வனையப்பட்டுள்ள குற்றச்சாட்டு தகுந்த சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கு இடமில்லாமல் நிரூபணம் செய்யப்படவில்லை என்று தீர்மானித்து அதனடிப்படையில் இவ்வழக்கில் எழுந்துள்ள சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்கி எதிரியை விடுதலை செய்ய வேண்டியது அவசியம் என்பதாகவே இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

***முடிவில்,*** எதிரி பிரிவு 21(4) of Mines and Minerals (Development and Regulation) Act, 1957 உ/இ இதச பிரிவு *379*-ன் கீழ் குற்றவாளி இல்லை என தீர்மானித்து கு.வி.மு.ச. பிரிவு 235(1)-ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

இவ்வழக்கில் பி.ஆர்.எண்.29/2022-ல் அ.சா.பொ.1-ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள TN 45 AW 9103 என்ற பதிவெண் கொண்ட டிராக்டர் மற்றும் TN 45 AW 9102 என்ற பதிவெண் கொண்ட டிரெய்லரை இந்நீதிமன்ற Crl.M.P.No.852/2022-ல் கடந்த 17.03.2022-ம் தேதியன்றும், TN 10 R 6331 என்ற JCB வாகனத்தை இந்நீதிமன்ற Crl.M.P.No.1414/2022-ல் கடந்த 19.04.2022-ம் தேதியன்றும் அதன் உரிமையாளரான எதிரி இராமசாமி, த/பெ.சின்னையா என்பவர் இடைக்கால பொறுப்பில் பெற்றுச் சென்றிருப்பதால், மேற்படி வாகனங்களை மேல்முறையீட்டுக் காலத்திற்கு பின்போ அல்லது மேல்முறையீடு இருப்பின் அதன் முடிவிற்கு பின்போ அதன் உரிமையாளரிடம் உரிய ஆவணங்களின் பேரில் நிரந்தரமாக ஒப்படைக்கப்பட வேண்டுமென்றும், இவ்வழக்கு குற்றச்சாட்டு குறித்து

வைப்புத் தொகை ஏதேனும் செலுத்தியிருந்தால் உரிய நீதிமன்றத்தில் மனு செய்து திரும்ப பெற்றுக் கொள்ளவும், எதிரி எழுதிக் கொடுத்த பிணை முறிகள் ரத்து செய்யப்பட வேண்டுமென்றும் உத்தரவிடப்படுகிறது.

இந்தத் தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரில் சொல்லப்பட்டு, பின்பு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, அதன்பின்பு என்னால் பிழை திருத்தப்பட்டு இன்று 2026-ம் ஆண்டு மார்ச் திங்கள் 23-ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

KANNAYEERAM ARIVOLI

Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.03.23 18:21:35 +0530

முதன்மை அமர்வு நீதிபதி,
சிவகங்கை.

**அரசுத் தரப்பு சாட்சிகள்:-**
**திருவாளர்கள்:**

| **அரசு தரப்பு சாட்சிகளின் வரிசை.** | **சாட்சிகளின் பெயர்** | **சாட்சிகளின் பற்றிய விபரம்** |
|---|---|---|
| அ.சா.1 | லாவண்யா,<br>கிராம நிர்வாக அலுவலர் | புகார் கொடுத்தது பற்றி கூறும் சாட்சி. |
| அ.சா.2 | பாலகிருஷ்ணன், | சம்பவம் பற்றி கேள்விபட்டது பற்றி கூறும் சாட்சி. |
| அ.சா.3 | பழனிச்சாமி | ஒப்புதல் வாக்குமூலம் சாட்சி. |
| அ.சா.4 | வீரமலை | பார்வை மகஜர் சாட்சி. |
| அ.சா.5 | கலாராணி,<br>காவல் ஆய்வாளர். | அ.சா.1 கொடுத்த புகாரின் பேரில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து சம்பவ இடம் சென்று பார்வை மகஜர், வரைபடம் தயார் செய்து, வழக்கு கோப்பை புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சாட்சிகளை விசாரித்து எதிரி மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்தது பற்றி கூறும் சாட்சி. |

**அரசுத் தரப்பு சான்றாவணங்கள்:-**

| **சான்றாவணங்களின் வரிசை.** | **சான்றாவணங்களின் விபரம்.** | **சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டவர்களின் விபரம்.** |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | புகார். | அ.சா.1 |
| அ.சா.ஆ.2 | ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1-வது சாட்சி கையொப்பம். | அ.சா.3 |
| அ.சா.ஆ.3 | பார்வை மகஜரில் உள்ள 1-வது சாட்சி கையொப்பம். | அ.சா.4 |
| அ.சா.ஆ.4 | முதல் தகவல் அறிக்கை. | அ.சா.5 |
| அ.சா.ஆ.5 | பார்வை மகஜர். | அ.சா.5 |
| அ.சா.ஆ.6 | மாதிரி வரைபடம் | அ.சா.5 |
| அ.சா.ஆ.7 | பிரேத விசாரணை அறிக்கை. | அ.சா.5 |
| அ.சா.ஆ.8 | ஒப்புதல் வாக்குமூலம். | அ.சா.5. |
| அ.சா.ஆ.9 | கைப்பற்றுதல் மகஜர். | அ.சா.5. |
| அ.சா.ஆ.10 | கைப்பற்றுதல் மகஜர். | அ.சா.5. |
| அ.சா.ஆ.11 | காயச்சான்று | அ.சா.5. |
| அ.சா.ஆ.12 | பிரேத பரிசோதனை அறிக்கை. | அ.சா.5. |
| அ.சா.ஆ.13 | விஸ்ரா அறிக்கை. | அ.சா.5. |
| அ.சா.ஆ.14 | எதிரி நீக்கல் அறிக்கை. | அ.சா.5. |
| அ.சா.ஆ.15 | சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை. | அ.சா.5. |
| அ.சா.ஆ.16 | படிவம்-91. | அ.சா.5. |
| அ.சா.ஆ.17 | படிவம்-91. | அ.சா.5 |
| அ.சா.ஆ.18 | தனிநபர் புகார் (200 Cr.P.C.) | அ.சா.5. |

KANNAYEERAM ARIVOLI

Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.03.23 18:21:50 +0530

23.03.2026

முதன்மை அமர்வு நீதிபதி, சிவகங்கை.

**<u>அரசுத் தரப்பு சான்று பொருள்:-</u>**

| **சான்று பொருட்களின் வரிசை** | **சான்று பொருட்களின் விபரம்.** | **சான்று பொருட்கள் குறியீடு செய்யப்பட்டவர்களின் விபரம்.** |
|---|---|---|
| அ.சா.பொ.1 | TN 45 AW 9103 என்ற பதிவெண் கொண்ட டிராக்டர் மற்றும் TN 45 AW 9102 என்ற பதிவெண் கொண்ட டிரெய்லர் மற்றும் TN 10 R 6331 என்ற பதிவெண் கொண்ட JCB. | அ.சா.5 |

**<u>எதிரி தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>:-** இல்லை.

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.03.23 18:21:55 +0530

முதன்மை அமர்வு நீதிபதி,
சிவகங்கை.

முதன்மை அமர்வு நீதிமன்றம்,
சிவகங்கை
**சிறப்பு அமர்வு வழக்கு**
**எண்.95/2024**
வரைவு - சீரான / தீர்ப்புரை
நாள்:23.03.2026

23.03.2026 முதன்மை அமர்வு நீதிபதி, சிவகங்கை.